**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 92 /2019 வா.சா.1**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 03–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: பழனிச்சாமி | தந்தை பெயர்: வெள்ளைச்சாமி |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

<u>03.03.2026:</u>

<u>1,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. வா.சா.ஆ–2 ல் வாரிசு சான்றிதழிலில் சேவுக பெருமாள் என்ற வாரிசு விடுபட்டுள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ–3 ல் கோட்டாட்சியர் கொடுத்த கடிதத்திலுள்ள சர்வே எண் 278/2 என்று உள்ளது என்றால் சரிதான் . மேற்படி ஆவணம் அழகு மனைவி பழனியம்மாள் பெயருக்கு வந்துள்ளது . பழனியம்மாள் பெயருக்கு வந்த தபாலை நான் குறியீடு செய்வதற்கு முகாந்தரம் இல்லை என்றால் சரியல்ல.

2. எனது பிரமாண வாக்குமூலத்தில் பழனியம்மாளுக்கு சேர்த்து நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்ததாக இல்லை என்றால் சரிதான் . மேற்படி வா.சா.ஆ–3 குறிப்பாணைக்கு தாக்கல் செய்த மனு எங்குள்ளது என்றால் தெரியாது நான் குறியீடு செய்யவில்லை. தாவா வழக்கின் சர்வே எண் 276/15 ஆகும்.

3. வா.சா.ஆ–4 மேற்படி நிலம் UDR யின் ஆள் மாறாட்டமாக அ .பழனியம்மாள் என்ற பெயரில் தாக்கல் ஆகியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி சர்வே எண்ணில் உள்ள இடத்திற்கு 276/15 க்கு அரசு இலவச மின்இணைப்பு பெறுவதற்கு முயற்சிப்பதாக தெரிய வருகிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 11 ம் வகுப்பு படித்துள்ளேன்.

4. வா.சா.ஆ–4 ல் பழனிச்சாமி பெயர் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான் . நான் அ .பழனியம்மாள் மீது ஆள் மாறாட்டம் சம்மந்தமாக எந்தவித புகாரும் அளிக்கவில்லை. வா.சா.ஆ–6 ஆவணம் சேதுராமனுக்கும், இலட்சுமணனுக்கும் நடந்த

பாகப்பிரிவினையாகும். எனக்கும், சேதுராமன், இலட்சுமணனுக்கும் நான் வாரிசு இல்லை என்றால் சரிதான் . மேற்படி நபர்களுக்கு நான் வாரிசு இல்லாத நிலையில் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதற்கு எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. நான் இலட்சுமணனின் மருமகன் ஆவேன்.

5. வா.சா.ஆ–6 சி ஷெடுலில் கேணி , மோட்டார் பம்பு, சிமெண்ட் பைப்பு என உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சி ஷெடுலில் மின்சார சம்மந்தமாக எந்த விவரமும் இல்லை என்றால் சரிதான் . மேற்படி இடத்திலும் 278/2 என்று சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ–7 ல் சர்வே எண் 278/2 உள்ளது. வா.சா.ஆ–7 க்கும், தாவாச் சொத்துக்கும் சம்மந்தமில்லை என்றாலும் சம்மந்தமில்லாத ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . வா.சா.ஆ–8 ஆவணத்தை தாக்கல் செய்வதற்கும் எனக்கு முகாந்திரமில்லை என்றால் சரியல்ல . வா.சா.ஆ–9 மின்கட்டண இரசீதில் யார் பெயர் உள்ளது என்றால் சேதுராமன் பெயரில் உள்ளது. வா.சா.ஆ–10 இரசீது சேதுராமன் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ–11 ல் உதவி மின் பொறியாளர் கொடுத்த பதிலில் தாவா இடத்திலுள்ள மின் இணைப்பை ஆட்சேபணை செய்வதற்கு வருவாய் துறை ஆவணங்களுடன் அலுவலகத்திற்கு 15 நாட்களுக்குள் ஆட்சேபணை தெரிவிக்க வேண்டும் என்றும் அவ்வாறு தெரிவிக்காதப்பட்சத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ–4, 12 இரண்டும் ஒரே ஆவணம் என்றால் சரிதான்.

8. 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான் . 3ம் பிரதிவாதி பெயர் கனகசபாபதி என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ளது 2013 என்றால் சரிதான். எனது மைத்துனர் மகனாகிய 3ம் பிரதிவாதிக்கு என்ன வயது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது. வழக்குரையில் வழக்கு தாக்கல் செய்த 2013ம் வருடம் 3ம் பிரதிவாதியின் வயது சுமார் 35 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . 2ம் பிரதிவாதி சேக்குவின் திருமணத்திற்கு நான் செல்லவில்லை . திருமணப்பத்திரிக்கையில் திருமண நாள் 28.08.1985 என்று உள்ளது . மேற்படி திருமணப்பத்திரிக்கை பி.வா.சா.ஆ–1 ஆகும்.

9. UDR 1981ல் ஏற்பட்டது. நான், பழனியம்மாள் , சேக்கு ஒரே வீட்டில் மூன்று பிரிவாக இருக்கிறோம். மின்சாரத்துறைக்கு எதிராக நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான் . மின்சார துறை அலுவலகத்திற்கு துரைரீதியான நடவடிக்கை எடுக்காமல் நேரடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் அது பற்றி தெரியாது. தாவாச் சொத்தான சர்வே எண் 276/15க்கு தனியாக பழனியம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான்.

10. 2ம் பிரதிவாதி சேக்குக்கு பழனியம்மாள் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை . மேற்படி பழனியம்மாள், 2ம் பிரதிவாதிக்கு கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பத்திரத்தை செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

11. மேற்படி 2ம் பிரதிவாதி, அவரது தங்கை 2ம் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் . மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மூத்த அண்ணன் 1ம் பிரதிவாதி சண்முகவேல் ஆவார். 1ம் பிரதிவாதி காணாமல் போய்விட்டார் . அ.வ.எண் 105/2019 வழக்கில் எனது பாகமும் , எனது அண்ணன் பாகத்தையும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பிராது நகல் **பி.வா.சா.ஆ–4** ஆகும்.

(வழக்கறிஞர் வேண்டகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)